**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 1994 இன் 01 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியக் கட்டளைகள் கோவையின் 12 ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று

இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 02 இற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று உண்மையான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் உண்மையான கா வெளிப் பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் நிதியம் அதற்கு முரணாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிதி நிலைமைக் கூற்றுக்களில் உருப்படிகளின் பெறுமதிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் இலக்கம் 54 மற்றும் 55 ஆம் பந்திகளின் பிரகாரம் ஐயக் கடன் ஒதுக்கத்தின் பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உருவாக்கமல்லாத செயற்பாடொன்றாக வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியம இலக்கம் 02 இன் பந்தி இலக்கம் 08 மற்றும் 56 இன் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் மீள் விற்பனை உண்டியல்கள் கணக்கு வைக்கும் போது 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முதிர்வடைவதற்கு எஞ்சியுள்ள காலமானது 03 மாதங்கள் அல்லது அதனை விட குறைந்த முதலீடுகள் நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனான திரவத் தன்மை மிக்க சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 03 மாத காலத்தினுள் முதிர்வடையவுள்ள 18 திறைசேரி உண்டியல்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 66,797,498 மற்றும் திறைசேரியின் மீள் விற்பனை (Repo) 02 இன் கூட்டுப்பெறுமதியான ரூபா | 2021 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

6,013,502 காசு மற்றும் காசுக்கு சமனான திரவத்தன்மை மிக்க சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

---

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1994 இன் 01 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன கட்டளை | | | |
| (i) | 2(4)(i)(உ) பிரிவு | திரைப்படங்களின் உயர் தரத்தினை உறுதி செய்வதற்காக திரைப்படங்களை தயாரிப்பதற்கு மற்றும் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 2(4)(i)(ஊ) பிரிவு | திரைப்படத் துறையிலுள்ள கலைஞர்களுக்கு மற்றும் தொழில்நுட்ப வினைஞர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதனை நோக்காக் கொண்டு நிதியம் செயற்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (iii) | 2(4)(i)(எ) பிரிவு | உயர் தரத்திலான கலைநயமிக்க திரைப்படங்களை முழுமையாக உற்பத்தி | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்வதற்காக திரைக்கதை மதிப்பீட்டு குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைக்கதைகள் அல்லது அவ்வாறான திரைப்படங்களை தயாரிக்கும் பணிக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய மூலமொன்றிலிருந்து விசேட உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணிப்பாளர்களுக்கு கடன் வழங்குதல் மூலம் திரைப்படத் தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (iv) | 2(4)(i)(ஏ) பிரிவு | 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக உள்நாட்டு திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஆகக் குறைந்தது பத்து திரைப்படங்களில் பணிகளை பூர்த்தி செய்துள்ள தொழில்சார் வினைஞர்களுக்கு தமது தமது ஆற்றல்களை அதிகரிப்பதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு கடன் தொகை வழங்குவதற்கு 2013ஆம் ஆண்டு தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (v) | 6(இ) பிரிவு | கடன் தொகையை மீள செலுத்துதல் தாமதமாகும் எனின், அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும், 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 73,548,176 ஆன கடன் | இந்த கட்டளைகளை 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகை தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 | 2020 ஆம் ஆண்டின் நிதியத்தின் சொத்துக்களை மதிப்பாய்வு செய்து மதிப்பாய்வு சபையின் அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை மதிப்பாய்வு செய்யும் போது அந்த சபையினால் நிதியத்தின் சொத்துக்களையும் மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 872(2)(ஈ) | நிதியாண்டு நிறைவடைந்து 02 மாதங்களினுள் சான்றுபடுத்திய நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 08 மாத தாமதத்தின் பின்னர் 2021 நவம்பர் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிலவிய Covid-19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் நிறுவனம் மூடப்பட்டமையும், கட்டுப்பாட்டுச் சபை கூடுவது தாமதிக்கப்பட்டமையாலும் கணக்குகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கை | 2013 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 22,643 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன், இதற்கு முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த இந்த செயலற்ற நடைமுறைக் கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் செயலற்றிருக்கும் கணக்கினை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 4,591,563 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 9,789,214 ஆகும். அதன் பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 5,197,651 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 3,877,556 இனால், அதாவது 92 சதவீதத்தினால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திரைப்பட தயாரிப்பு மற்றும் திரையரங்குகளுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையினுள் 05 முதல் 26 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டு வரப்படும் அறவிடப்படகூடியதாக நிதியத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட கடன்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 66,958,372 காணப்பட்டது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த பெறுமதி வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகையின் 91 சதவீதம் ஆகும். கடனை வழங்கும் போது மற்றும் அறவிடும் போது முறையாக கால அடிப்படையில் செயற்படாத காரணத்தால் மேற்படி கடன் மீதிகளை அறவிட முடியாது தொடர்ச்சியாக நிலுவைக் கடன் மீதியாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது. | அவதானிப்பு சரியானதாகும். கடன் குழுவினால் நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன் தொகை உரிய நடவடிக்கையை பின்பற்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்திற்கு சொந்தமான வங்கி நடைமுறைக் கணக்கின் 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட மாதாந்த சராசரி மீதி ரூபா 12,053,864 ஆகும். அந்த கணக்கில் ஆண்டு முழுவதும் நிலவிய நலனான மீதியை ஆக்கபூர்வமான முறையில் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி மேலதிக வருமானமொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | திரையரங்குகளுக்காக கடன் வழங்குவதற்கு பணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது கடன் கோரிக்கைகள் தாமதமானமையின் அடிப்படையில் அந்த மிகைப் பணத்தினை குறுங்கால அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டது. | மிகைப் பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கான கட்டுப்பாட்டு கருவியாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |